# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஜனவரி மாத அவசரக்கூட்டம் 27.01.2021 ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-ல் மரமடி குருசடியின் மேற்கு பக்கம் வீட்டு எண்.10-54-ன் அருகில் பழுதடைந்த நிலையில் உள்ள வடிகால் ஓடைக்கு மாற்றாக புதிதாக மூடியுடன் கூடிய வடிகால் ஓடை மற்றும் சிமெண்ட் சாலை அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2,30,000/-க்கு, மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2416 நாள் 30.11.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு (ரூ.2,00,963.10/-) |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.08% குறைவு (ரூ.2,00,818/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீம்டை விட 0.08% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1337/2020/இ1

**தீர்மானம் எண்.2440 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13-ல் துறைமுகத்தெரு கதவு எண்.13-66-ன் அருகில் குறுகலாக உள்ள வடிகால் ஓடைக்கு மாற்றாக புதிதாக மூடியுடன் கூடிய வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை ஆகியவை அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2,80,000/-க்கு, மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2417 நாள் 30.11.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு, 06.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு (ரூ.2,45,362.25/-) |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.11 % குறைவு (ரூ.2,45,121/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீம்டை விட 0.11% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1337-1/2020/இ1

**தீர்மானம் எண்.2441 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.3

சட்டப்பேரவை விதி 110-ன் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை நாள் 19/03/2020-ன் படி, இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1-ல் பவுண்டரி சாலையில் (சர்வே எண்.எ1-3/10) கார்மல் ஜோதி பள்ளிக்கூடம் அருகில் Gym & Shed with Equipments அமைத்தல் பணியினை ரூ.9,80,000/- மதிப்பீட்டில், நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2424 நாள் 30.11.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கி உள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 08.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.A.ஜேக்கப் டேனியல், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு (ரூ.8,76,465.93/-) |
| 2. | திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.17% அதிகம் (ரூ.8,78,036.12/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.A.ஜேக்கப் டேனியல், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1337-1/2020/இ1-1

**தீர்மானம் எண்.2442 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.4

சட்டப்பேரவை விதி 110-ன் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை நாள் 19/03/2020-ன் படி, இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23-ல் சாஸ்தான்கரை பகுதியில் (சர்வே எண்.P2-3/10) யோக மையம் அமைத்தல் பணியினை ரூ.9,80,000/- மதிப்பீட்டில், நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2424 நாள் 30.11.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கி உள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 08.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.A.ஜேக்கப் டேனியல், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.21% அதிகம் (ரூ.8,10,706.88/-) |
| 2. | திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.11% குறைவு (ரூ.8,08,136.98/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட விட 0.11% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1337-1/2020/இ1-2

**தீர்மானம் எண்.2443 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.5

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு காம்பேக்டர் லாரி எண்.TN 75-L-2565-க்கு பேட்டரி சரியாக இயங்காத காரணத்தால், புதிய பேட்டரி வாங்குவதற்கு 04.01.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| **வ. எண்.** | **நிறுவனத்தின் பெயர்** | **தொகை ரூ.** |
|---|---|---|
| 1. | M/s. Sai Battery service,<br>Main Road, Colachel. | ரூ.7600/- |
| 2. | M/s.Manickam Battery works<br>Pammam Main Road,<br>Marthandam. | ரூ.8230/- |
| 3 | M/s.Sivanesh Battery<br>8/1, A.R.Camp Road<br>Beach Road, Nagercoil | ரூ.8330/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.3 ஐ விட வரிசை எண்.1, M/s.Sai Battery service, Colachel நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்கு.

ந.க.எண்.1841/2013/எச்1

**தீர்மானம் எண்.2444 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.6

இந்நகராட்சிக்கு, சிறப்பு சாலைத் திட்டம் 2020-21-ன் கீழ், ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 சிப்பம் சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விவரம் மன்றத் தீர்மானம் எண்.2428 நாள் 17.12.2020-ன் படி, மன்றத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு முதன்மை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை செயல்முறைகள் ந.க.எண்.23659/2020-32/DO2 நாள் 21.12.2020-ன் படி, தொழில் நுட்ப அனுமதி பெற்று பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி சாலைப்பணிகளுக்கு 19.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப உறை (Technical Bid) ஒப்பந்தப்புள்ளி குழு அலுவலர்கள் மற்றும் வருகைப்புரிந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு, கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில், தொழில் நுட்ப தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை (Price Bid) 23.01.2021 அன்று மாலை 5.00 மணிக்கு திறக்கப்பட்டது. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| சிப்பம் எண்.1 | திரு.T.ஜார்ஜ் ஸ்டீபன்,<br>ஒப்பந்ததாரர்<br>12-5, கருமாவிளை,<br>பெத்தேல்புரம் அஞ்சல். | மதிப்பீட்டை விட 0.33% குறைவு<br>(ரூ.86,66,111/-) |
| சிப்பம் எண்.2 | திரு.T.ஜார்ஜ் ஸ்டீபன்,<br>ஒப்பந்ததாரர்<br>12-5, கருமாவிளை,<br>பெத்தேல்புரம் அஞ்சல். | மதிப்பீட்டை விட 0.41% குறைவு<br>(ரூ.87,31,555/-) |

| | | |
|---|---|---|
| சிப்பம் எண்.3 | திரு.K.G.கிருஷ்ணதாஸ்,<br>ஒப்பந்ததாரர்<br>ராமன் செம்பருத்திவிளை<br>பழவார், குழித்துறை | மதிப்பீட்டை விட 0.05% குறைவு<br>(ரூ.86,62,048.80/-) |

எனவே திட்டப்பணிகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, சிப்பம் 1, 2 & 3 ஆகியவற்றிற்கு பெறப்பட்டுள்ள மேற்காணும் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று, சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு Letter of Acceptance (LOA) வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1246/2020/இ1

**தீர்மானம் எண்.2445 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.7

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் (ம) பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/2383/2020 நாள் 17.12.2020-ன் படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்: 2020-21-ன் கீழ், குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர் காரிதாஸ் காலனி சுனாமி நினைவு ஸ்தூபி அருகாமையில் Double Arm solar light அமைத்தல் பணியினை ரூ.70,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 21.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s. Success Engineering,<br>Puliyoorsalai,<br>Mancode post | மதிப்பீட்டை விட 0.48% குறைவு<br>(ரூ.62,200/-) |
| 2. | M/s.Voltan Engineering,<br>Prop.N.Navaraj,<br>Thyalumoodu, Kaliyakkavilai. | மதிப்பீட்டு விகிதம்<br>(ரூ.62,500/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s. Success Engineering, Puliyoorsalai நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.48% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1320/2020/இ1

**தீர்மானம் எண்.2446 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.8

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் (ம) பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/2383/2020 நாள் 17.12.2020-ன் படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்: 2020-21-ன் கீழ், குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் சந்திப்பு ஸ்ரீ நாகராஜா கோவில் முன்பாக Double Arm solar light அமைத்தல் பணியினை ரூ.70,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 21.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s. Success Engineering,<br>Puliyoorsalai,Mancode post | மதிப்பீட்டை விட 0.48% குறைவு<br>(ரூ.62,200/-) |
| 2. | M/s.Voltan Engineering,<br>Prop.N.Navaraj,<br>Thyalumoodu, Kaliyakkavilai. | மதிப்பீட்டு விகிதம்<br>(ரூ.62,500/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s. Success Engineering, Puliyoorsalai நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.48% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1307/2020/இ1

**தீர்மானம் எண்.2447 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2-ல் புதுத்தெருவில் சிறுபாலம் மற்றும் சி.எம்.சி காலனியில் வடிகால் ஓடை அமைத்தல் பணிகளை மேற்கொள்வதறகாக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,20,000/-க்கும், மேற்படி பணிகளை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2434 நாள் 31.12.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு, 23.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.08% அதிகம் (ரூ.98,506/-) |
| 2. | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.02 % குறைவு (ரூ.98,411/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.செல்லநாடார், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீம்டை விட 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1427/2020/இ1

**தீர்மானம் எண்.2448 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.10

இந்நகராட்சியில், சிறப்பு சாலை திட்டம் : 2020-21-ன் கீழ், ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள 3 சிப்பம் சாலை பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான தமிழ் (மாலை மலர்) மற்றும் ஆங்கிலம் (Indian Express) நாளிதழ்களில், முறையே 24.12.2020 மற்றும் 25.12.2020 ஆம் தேதிய பதிப்புகளில் வெளியிட்ட வகையில் விளம்பர கட்டணம் ரூ.68,145/-ஐ வழங்க கேட்டு, M/s.Flame Advertising Company Private ltd, Chennai நிறுவனத்திடமிருந்து பட்டியல் எண்.440 நாள் 25.12.2020 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும், திட்ட நிதி பெறப்பட்ட பின்னர் பொது நிதிக்கு மேற்படி தொகையினை மாற்றம் செய்து கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1246/2020/இ1

**தீர்மானம் எண்.2449 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.11

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் 2021-2022 ஆம் ஆண்டிற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட சாலையோர தென்னை மரம் மகசூல் அனுபவிக்கும் உரிமம் ஆகியவற்றிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தை 13.01.2021-ல் ஜூனியர்

குரல் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் ரூ.10,000/-ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.06/2020/அ3

**தீர்மானம் எண்.2450 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.12

குளச்சல் நகராட்சி பகுதியில் கசடு கழிவு மேலாண்மை திட்டம்: 2018-19-ன் கீழ், ரூ.548.35 இலட்சம் மதிப்பீட்டில் 40KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.26888/UGSS-2/2018 நாள் 12.11.2018-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி துவங்கி நடைபெற்று வருகிறது. பணிகள் முடிவுற்ற உடன் அதனை செயலபடுத்த உபவிதிகள் உருவாக்க வேண்டியுள்ளது. உபவிதிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 19-20-ன் பிரிவு 306 உட்பிரிவு 5 (உ) மற்றும் உட்பிரிவு 6 (1920) தமிழ்நாடு சட்டம் 5)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அறிவுரைகள் படியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம்) சட்டம் 1930 (1930 ஆம் தமிழ்நாடு சட்டம் 10)-ன் படியும் உருவாக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே இணைக்கப்பட்டுள்ள குளச்சல் நகராட்சி கசடு கழிவு மேலாண்மை உபவிதிகள் வரைவு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் மேற்படி உபவிதிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் பொது அனுமதி (General Approval) பெறுவதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566-1/2018/இ1

**தீர்மானம் எண்.2451 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.13

இந்நகராட்சியில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014-15 (SBGF) திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர் திரு.M.வர்க்கீஸ் பெயரில் 5% வைப்புத் தொகை ரூ.6,00,000/- (ரூ.164108/-, ரூ.135763/-, ரூ.230668/-, ரூ.69461/-) காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளது. இந்நிலையில் மேற்படி பணி செய்த ஒப்பந்ததாரர் திரு.M.வர்க்கீஸ் இறந்து விட்டதால், அவரது வாரிசுதாரராக உள்ள மகன் திரு.V.ராஜ பிரவின் பெயரில் வைப்புத் தொகை ரூ.6,00,000/- வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2861/2014/இ1

**தீர்மானம் எண்.2452 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.14

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு, தெருவிளக்கு பராமரிப்பு பிரிவு/ குடிநீர் வினியோகப் பிரிவு ஆகியவற்றில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பழைய உபகரணங்களை பொது ஏலம் விடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் பிரிவுகளில் உள்ள பொருட்கள் விவரம் பின்வருமாறு,

| I | பொது சுகாதாரப் பிரிவு | எண்ணிக்கை | உத்தேச மதிப்பீடு (ரூ.) |
|---|---|---|---|
| 1 | Compactor Bin | 50 Nos. | 1,27,000/- |
| 2 | Plastic Bin | 85 Nos. | |
| 3 | Push Cart | 12 Nos. | |

| | | | |
|---|---|---|---|
| II | குடிநீர் வினியோக பிரிவு | | 1,87,000/- |
| 1 | 10 H.P. Sub-Mercible Motor with Pump | 23 Nos. | |
| 2 | 1 H.P. Mono block Motor | 16 Nos. | |
| 3 | Panel Board | 25 Nos. | |
| 4 | Main Switch | 10 Nos. | |
| 5 | Change over switch | 10 Nos. | |
| 6 | 4 “ Sluice Valve | 23 Nos. | |
| 7 | 5 “ Sluice Valve | 6 Nos. | |
| 8 | 6 “ Sluice Valve | 9 Nos. | |
| 9 | 3 “ Sluice Valve | 29 Nos. | |
| 10 | 2 “ Sluice Valve | 13 Nos. | |
| 11 | 4 “ Air Valve | 4 Nos. | |
| 12 | 3/4 “ Air valve | 3 Nos. | |
| 13 | 2 “ U PVC Pipe | 24 Nos. | |
| 14 | 2 “ PVC Pipe | 3 pieces | |
| 15 | 2 “ GI Pipe | 8 pieces | |
| 16 | 4 “ GI Pipe | 6 pieces | |
| 17 | 5 “ GI Tee | 1 piece | |
| 18 | GI Ladder (small) | 1 No. | |
| 19 | Service wire | 70 m | |
| 20 | Cable wire | 1000 m | |
| 21 | Rope | 120 m | |
| 22 | Hose pipe | 60 m | |
| 23 | Motor cover | 31 Nos. | |
| 24 | PVC pipes | small pieces | |
| 25 | Mini mast light pillar (4” G.I) | 6 pieces | |
| III | தெருவிளக்கு பராமரிப்பு பிரிவு | | 54,000/- |
| 1 | 40 W Tube light | 3497 Nos. | |
| 2 | 40 W Choke | 2285 Nos. | |
| 3 | 40 W Starter | 3016 Nos. | |
| 4 | Tube side holder | 723 Nos. | |
| 5 | 250 W Sodium vapour bulb | 23 Nos. | |
| 6 | 250 W Sodium vapour choke | 31 Nos. | |
| 7 | 33 MFD Condensor | 21 Nos. | |
| 8 | Ignitor | 21 Nos. | |
| 9 | Sodium vapour holder | 21 Nos. | |
| 10 | 16A Fuse | 9 Nos. | |
| 11 | 32 A Fuse | 4 Nos. | |
| 12 | 63 A Fuse | 2 Nos. | |
| 13 | Tube light Fittings | 172 Nos. | |
| 14 | 400 W metal halide bulb | 10 Nos. | |

| | | | |
|---|---|---|---|
| 15 | 400 W halide metal choke | 7 Nos. | |
| 16 | 42 MFD Condensor | 8 Nos. | |
| 17 | 36 W CFL Tube | 609 Nos. | |
| 18 | 36 W Electronic choke | 397 Nos. | |
| 19 | 4 pin holder | 209 Nos. | |
| 20 | 20 W LED Tube light | 281 Nos. | |
| 21 | 18 W 4 pin LED Tube | 58 Nos. | |
| 22 | 4 Pin Fittings | 20 Nos. | |

மேற்காணும் பழைய உபகரணங்களை அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் பொது ஏலத்திற்கு விடுவதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.92-1/2021/இ1

**தீர்மானம் எண்.2453 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.15

இந்நகராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் : 2012-13-ன் கீழ், குழந்தை ஏசு காலனியில் கட்டப்பட்ட நியாய விலை கட்டிடம், இதுநாள் வரை பயன்படுத்தப்படாமல் பூட்டப்பட்டு இருந்ததால், கதவுகள் மற்றும் Shutter துருப்பிடித்து, திறக்க முடியாத நிலையில் உள்ளது. தற்போது நியாயவிலை கடை பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளதால், பொது மக்கள் ரேஷன் பொருட்களை வெயில் மற்றும் மழை காலங்களில் பாதுகாப்பாக நின்று வாங்குவதற்கு வசதியாக மேற்கூரை அமைக்கவும், கட்டிடத்தை சுற்றிலும் காங்கிரீட் தளம் அமைத்தும், கட்டிடத்தை வர்ணம் பூசுவதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,40,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.191/2021/இ1

**தீர்மானம் எண்.2454 அனுமதிக்கப்படுகிறது**